1980 பிப்ரவரி 2]

இராமேசுவரம் நகரத்தைச் சுற்றுலா மையமாக்கல்.

வினா எண் 7—திரு. கா. செங்கோடன் மற்றும் திரு. த. இராமசாமி : மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) இராமேசுவரம் நகரத்தை சுற்றுலா மையமாக்க அரசிடம் திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு முதல் எடுத்துக் கொள்ளப் படும்?

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) மற்றும் (ஆ) : தற்போது இல்லை.

திரு, த. இராமசாமி : இராமேசுவரம் நகரத்தைச் சுற்றுலா மையமாக்க அரசிடம் திட்டம் இல்லையென்று சொல்கிறார்கள். அங்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து போகிற நிலை இருக்கும் காரணத்தால் அந்தப் பயணிகள் வசதிகள் இல்லாது அவதிப்படும் நிலையை அரசு கவனத்தில் கொண்டு மேற்கொண்டு அதைப் பற்றிப் பரிசீலிக்க முன்வருமா?

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) ; இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமநாதபுரம் தீவுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கும் மற்றவர்களுக்கும் வசதியாக தீவின் முக்கிய இடங்களில் சுமார் 3 லட்சம் ரூபாய் செலவில் ஓய்வுக் குடில்களும், உடை மாற்று சிறைகளும், இதர பயணச் சாதனங்களும் ஏற்படுத்தித் தரலாமெனக் கருதி, இப் பணியினை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வாயிலாக நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

•திரு. கே. எம். அப்துல் ரசாக் : வேறு எந்தெந்த இடங்களில் சுற்றுலா மையம், வரும் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது? ஏழை மக்களுடைய சுற்றுலா மையமான குற்றாலம் எடுக்கப்பட இருக்கிறதா? அதற்கான வேலை துவங்கப்பட்டிருக்கிறதா?

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : இராமேஸ்வரத்திற்கு வருகிற யாத்திரிகர்களை கவருகிற அளவுக்கு ஏற்பாடுகளை அரசு செய்துள்ளதா? ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள்?

[1980 பிப்ரவரி 2

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): உள்நாட்டில் இருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் வருகின்ற சுற்றுலாப் பயணிகளை மட்டுமல்லாது இந்த நாட்டின் பல்வேறு பாகங்களைச் சேர்ந்த சமயச் செல்வர்களையும் மிகுந்த அளவில் தன்பால் கவர்ந்த வண்ணமாய் இத் தீவு விளங்கி வருகிறது. ஆண்டுக்கு 7,000-க்கும் மேற்பட்ட அந்நியப் பயணிகளும், 8 இலட்சத்திற்கும் மேற்பட்ட உள்நாட்டுப் பயணிகளும் இவ்விடத்திற்கு வந்து போவதாக மதிப்பிடப்படுகிறது.

ஒலி-ஒளிக்காட்சியில் தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு

வினா எண் 8 — டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு பற்றிய ஒலி-ஒளிக்காட்சி சென்னையில் நடத்தப் பெற்றதா?

(ஆ) ஆம் எனில், அதனை மாவட்டம் தோறும் தொடர்ந்து நடத்தும் உத்தேசம் உண்டா?

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) ஆம்.

(ஆ) சில மாவட்டங்களிலும் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் நடைபெற்ற தந்தை பெரியார் வாழ்க்கை வரலாற்றினைப் பற்றிய ஒலி-ஒளிக்காட்சிக்கு எவ்வளவு செலவானது? அதற்கு வசூலான தொகை எவ்வளவு? அந்த வசூல் குறைவாக இருக்குமானால் அதைக் கூடுதலாக்க மாற்று வழிகளை உருவாக்க அரசு முயற்சிக்குமா? அதைப் போலவே பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றியும் ஒலி-ஒளிக் காட்சியை நடத்த அரசு முன் வருமா?

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவினை ஒட்டி அவர்களின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகள் பற்றி ஒலி-ஒளிக்காட்சியாக சென்னை ராஜாஜி மண்டப முகப்பில் 26-9-1979 முதல் 28-10-1979 வரையில் நடத்தப்பட்டது. இந்த ஒலி-ஒளிக் காட்சிக்கு செலவிடப்பட்ட மொத்தத் தொகை சுமார் ரூ. 5,78,000. சென்னை மாநகரத்தில் ராஜாஜி மண்டபத்தில் நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சியின் மூலம் ரூ. 15,541.75 வசூலானது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்